ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 34 ]
Total No. of Questions : 34 ]

[ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 4
[ Total No. of Printed Pages : 4

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 42-T (OS)**

**Code No. : 42-T (OS)**

**ಶಿಕ್ಷಣ – I**

**EDUCATION – I**

# ಆಧುನಿಕ ಶಿಕ್ಷಣದ ಒಲವುಗಳು

# TRENDS IN MODERN EDUCATION

(ತಮಿಳು ಭಾಷಾಂತರ)

( Tamil Version )

**(ಹಳೆ ಪಠ್ಯವಸ್ತು)**

**( Old Syllabus )**

ದಿನಾಂಕ : 29. 06. 2015 ]
Date : 29. 06. 2015 ]

ಸಮಯ : ಮಧ್ಯಾಹ–2.00 ರಿಂದ 5.00 ರವರೆಗೆ ]
Time : 2.00 P.M. to 5.00 P.M. ]

[ ಪರಮಾವಧಿ ಅಂಕಗಳು : 100
[ Max. Marks : 100

*ಅಭ್ಯರ್ಥಿಯ ನೋಂದಣಿ ಸಂಖ್ಯೆ*
*Register Number of the Candidate*

**பகுதி – A**

I. கீழ்க்காணும் வினாக்களில் எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு மூன்று பக்கத்திற்கு மிகாமல் விடையளிக்கவும். அக்கேள்விகளுள்ள பாகம் (a) மற்றும் பாகம் (b) இரண்டிற்கும் விடையளிக்கவும். ஒவ்வொரு வினாவிற்கும் பத்து மதிப்பெண்கள் வழங்கப்படும் : $4 \times 10 = 40$

1. a) வயது வந்தோர் கற்ற ன் (Adult learning) அணுகுமுறைகளைப் பற்றி குறிப்பிடவும் மற்றும் அவற்றில் ஏதேனும் இரண்டினைப் பற்றிக் கலந்துரையாடவும்.

   b) வயது வந்தோர் கல்வியில் பயன்படுத்தும் உபகரணங்களைப் பட்டிய டவும். அவற்றில் ஏதேனும் இரண்டினைப் பற்றி விவரிக்கவும். 5 + 5

2. a) பெண் கல்வியின் தேவையைப் பற்றி குறிப்பிடவும். மற்றும் அவற்றில் ஏதேனும் இரண்டினைப் பற்றி விளக்கவும்.

   b) பெண் கல்வியை மேம்படுத்துவதில் கல்வி நிறுவனங்களின் பங்கு யாது ?

5 + 5

3. a) கல்வியில் 'வீணாதல்' மற்றும் 'தேக்கம்' இவைகள் ஏற்படுவதற்கான காரணங்களை எழுதவும். அவற்றுள் ஏதேனும் இரண்டு காரணங்களை தெளிவுபடுத்தவும்.

   b) ஆரம்பநிலைக் கல்வியில் 'உலகமயமாக்குத ன்' (Universalization) ஏதேனும் ஐந்து தேவைகளைப் பற்றி விளக்கவும். 5 + 5

4. a) மனிதவள மேம்பாட்டின் (Human Resource Development) இலக்கினைக் குறிப்பிடவும்.

   b) மனித வளத்தில் குடும்பத்தின் பங்கு யாது ? 5 + 5

5. a) மாற்றுத் திறனுள்ள குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின் (Integrated Education) ஏதேனும் ஐந்து காரணங்களைக் கறவும்.

   b) ஒருங்கிணைந்த கல்வித்திட்டத்தின் உத்திகளைப் பற்றி விளக்கவும். 5 + 5

6. a) 1959 இன் UN அறிக்கையின்படி, ஒரு குழந்தையின் ஏதேனும் ஐந்து அடிப்படை உரிமைகளை எழுதவும்.

   b) குழந்தையின் உரிமைகளை உறுதிப்படுத்துவதில் பள்ளிகளின் பங்கினை மதிப்பிடவும். 5 + 5

7. a) சுற்றுச்சூழலுக்குரிய மதிப்பு சீரழிவிற்கான (Economic Degradation) காரணங்கள் மற்றும் சிக்கல்களைக் குறிப்பிடவும். அவற்றுள் ஏதேனும் மூன்றைப் பறறி விவாதிக்கவும்.

   b) இயற்கை மூலங்களைப் பாதுகாத்தல் மற்றும் நிர்வகித்தல் வழிமுறைகளைப் பற்றி விளக்கவும். 5 + 5

## பகுதி – B

II. கீழ்க்கண்ட ஏதேனும் **ஏழு** வினாக்களுக்கு மட்டும் ஒரு பக்கத்திற்கு மிகாதவாறு விடையளிக்கவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் ஐந்து மதிப்பெண்கள் கொடுக்கப்படும் :

$7 \times 5 = 35$

8. சர்வ சிக்ஷு அபியானின் பொருளை விளக்கவும் மற்றும் அதன் குறிக்கோள்களில் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிடவும்.

9. தேசிய திறந்தவெளிப் பள்ளியின் ஏதேனும் ஐந்து பணிகளைப் பற்றி விளக்கவும்.

10. தொடக்கப் பள்ளியில் மதிய உணவுத் திட்டத்தின் ஏதேனும் ஐந்து நோக்கங்களைக் குறிப்பிடவும்.

11. இந்தியாவில் குழந்தை தொழிலாளிகள் இருப்பதற்கான காரணங்களை எழுதவும்.

12. பெண்களின் நிலைமையைக் குறிப்பிடுவதற்கான முக்கிய சூசகங்கள் (Vital indices) யாவை ?

13. முறை சாரா கல்விக்கான ஏதேனும் ஐந்து தேவைகளை வெளிக் கொணர்க.

14. 'நாம் சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டும்' இக்கூற்றினை நியாயப்படுத்துக.

15. செய்தித் தொடர்பில் கொள்கைகள் என்று கருதக்கூடியவை யாவை ?

16. செய்தித் தொடர்பின் வகைகளைப் பற்றி விளக்கவும்.

17. 'கற்ற ன் குறைந்தபட்ச நிலை' (Minimum Levels of Learning) என்றால் என்ன ? அதன் முக்கிய அம்சங்களைக் குறிப்பிடுக.

## பகுதி – C

III. கீழ்க்காணும் ஏதேனும் **ஐந்து** வினாக்களுக்கு அரை பக்கத்திற்கு மிகாதவாறு விடையளிக்கவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் மூன்று மதிப்பெண்கள் வழங்கப்படும் :

5 × 3 = 15

18. 'சிண்ணர அங்களா' என்றால் என்ன ? அதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிடவும்.

19. 'மண வயது' - இதன் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்கவும்.

20. 'சமத்துவம்' (Equity) அடைவதில் நாம் எதிர்கொள்ளும் ஏதேனும் மூன்று சிக்கல்களைக் குறிப்பிடவும்.

21. DPEP இன் மூன்று நோக்கங்களைக் கூறுக.

22. 'பொறுப்பான பெற்றோர்கள்' (Responsible parenthood) என்னும் கருத்துருவைப் பற்றி விவரி.

23. கழிவுப் பொருளை உரமாக்குத ல் பயன்படும் இரண்டு பொருட்களைக் குறிப்பிடவும். அதன் வழிமுறையைப் பற்றி விளக்கவும்.

24. மக்கள் செய்தித் தொடர்பியல் (Mass communication) மற்றும் பொதுமக்கள் செய்தித் தொடர்பியல் (Public communication) இவைகளுக்கு இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை ?

## பகுதி – D

IV. கீழ்க்காணும் **அனைத்து** வினாக்களுக்கும் ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். ஒவ்வோர் வினாவிற்கும் ஒரு மதிப்பெண் கொடுக்கப்படும்.

10 × 1 = 10

25. 'அக்ஷர சேனெ' - இதன் முக்கிய நோக்கம் என்ன ?

26. 'பா   ன விகிதம்' (Sex ratio) - வரையறுக்கவும்.

27. 'இகோ கிளப்' (Eco-club) இன் ஏதேனும் ஒரு நிறையைப் பற்றி எழுதவும்.

28. 'குழந்தை இறப்புவீதம்' (Infant mortality) என்பதன் பொருள் என்ன ?

29. வெளியிடு பகுத்தாய்வு முறைக்கான (Issue Analysis Method) ஓர் எடுத்துக்காட்டு தரவும்.

30. CAPE - ஐ விரிவாக்கவும்.

31. குழந்தைத் தொழிலாளர்களுக்கான பள்ளிக்கூடத்தின் (Schooling for Child Labourers' Programme) நோக்கங்களைக் குறிப்பிடவும்.

32. மனித உரிமைகளின் உலகளாவிய அறிவிப்பு (Universal Declaration of Human Rights) எப்பொழுது ஏற்றுக்கொள்ளப்பட்டது ?

33. தேசிய எழுத்தறிவுக் குறிக்கோளின்படி (National Literarcy Mission) எழுத்தறிவு என்பதை வரையறுக்கவும்.

34. 'வித்ய சேதனா' (Vidya Chethana) என்றால் என்ன ?